**Date : 08.10.2021.**

**O.S. No.59/2015**

***வா.சா.1 .திருமதி. மீனாட்சி***

***10வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை***

*தாவா சொத்து எனது தாத்தா மாசாணம் மற்றும் வீரகாமு அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு 3 அத்தைகள் என்று சொன்னால் சரிதான். அவர்களுக்கும் சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அத்தைகள் யாரும் தற்போது உயிரோடு இல்லை. வாரிசுகள் இருக்கிறார்கள். தாவா சொத்தில் அவர்களுக்கும் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கு பாதிப்படைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயாரின் நகைகள் அவர் இறந்ததற்கு பின்னர் எனது தகப்பனாரிடம் இருந்தது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தாயாரின் நகைகளை 8ம் பிரதிவாதி சோமுவின் மனைவியிடம் கொடுத்தார். பொதுவாக அவரிடம் கொடுத்தார். பொதுப்படையாக கொடுத்ததால் நாங்கள் யாரும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. நான் கூறுவது தவறு என்றும், எனது தாயாரின் நகைகளை எனது தகப்பானர் தான் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. 4ம் இலக்க சொத்து என்பது கற்பனையானது என்று சொன்னால் சரியல்ல. 1வது இலக்க சொத்து ஓரேவீடு என்று சொன்னால் சரிதான். எனது குடும்ப செலவிற்கு 10ம்பிரதிவாதி எனக்கு பணம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை எம்.எம்.ஆர் ரேடியோஸ் என்ற சவுண்டு சர்வீசை நடத்தி வந்தார் என்றால் சரிதான். எனது தந்தை நடத்தி வந்த தொழிலை தற்போது யாரும் பார்க்கவில்லை. 2ம் பிரதிவாதி சண்முகம் தான் எனது தந்தையின் தொழிலை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. 2ம்*

பிரதிவாதியின் தூண்டுதலின் பெயரில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அதனால் தான் அவர் எனது தந்தையின் தொழிலை செய்யவில்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எம்.எம்.ஆர். ரேடியோவிற்கு சென்னை மற்றும் மதுரையில் சொத்துக்கள் உள்ளன என்றால் சரியல்ல. எனது தந்தை உயிரோடு இருக்கும்போது எனது தம்பி பழனிஆண்டவர் அப்பாவோடு கடையில் இருந்து தொழில் பார்த்து வந்தார். எனது தந்தையின் தொழிலை 2ம் பிரதிவாதி தான் முழுவதுமாக கைப்பற்றி தொழில் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களிலிருந்து நான் வெளியேறி விட்டதால் தாவா சொத்துக்களில் எனக்கு பாகம் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. அதனால் வழக்கில் கேட்ட பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல

**6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

sd/-G.Vijaya,

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.